செ.வெ. எண்: 119 நாள்: 09.02.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 30.12.2011 அன்று தமிழகத்தை தாக்கிய ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (9.2.2012) தலைமைச் செயலகத்தில் கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 1 கோடியே 88 லட்சத்து 1 ஆயிரத்து 952 ரூபாய்.
2. மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.B. தங்கமணி அவர்கள் தொழில்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 1 கோடியே 64 லட்சத்து 82 ஆயிரத்து 995 ரூபாய்.
3. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. என்.ஆர். சிவபதி அவர்கள் பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககங்களின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 25 கோடியே 5 லட்சத்து 38 ஆயிரத்து 942 ரூபாய்.
4. மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, எழுதுபொருள் மற்றும் அச்சு, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை சார்பாக 13 லட்சத்து 23 ஆயிரத்து 798 ரூபாய்.
5. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் சார்பாக 10 லட்சம் ரூபாய்.
6. M.R.F. நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. கே.எம். மேமன் அவர்கள் 1 கோடி ரூபாய்.
7. அப்போலோ மருத்துவமனையின் இயக்குநர் திருமதி. ப்ரிதா ரெட்டி அவர்கள் 1 கோடியே 50 லட்சம் ரூபாய்.
8. தொழிலதிபர் திரு.ஏ.சி. முத்தையா அவர்கள் 1 கோடி ரூபாய்.
9. தமிழ்நாடு ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. எம். வெங்கடசுப்பு அவர்கள் 75 லட்சம் ரூபாய்.
10. கோயம்புத்தூர், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர் கருணாகரன் அவர்கள் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்ற கல்லூரிகளின் சார்பாக 50 லட்சம் ரூபாய்.
11. Empee குழும நிறுவனத்தின் தலைவர் திரு. எம்.பி. புருஷோத்தமன் அவர்கள் 25 லட்சம் ரூபாய்.
12. மதுரை, மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் நிர்வாக பொறுப்பாட்சியர் மற்றும் துணைத் தலைவர் டாக்டர் எஸ். குருசங்கர் அவர்கள் 20 லட்சம் ரூபாய்.

13. கோயம்புத்தூர், கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் டாக்டர் ஜி. பக்தவத்சலம் அவர்கள் கே.ஜி. மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் ஒரு நாள் சம்பளம் 15 லட்சம் ரூபாய்.

14. கோயம்புத்தூர், PRICOL நிறுவனத்தின் துணைத் தலைவர் திருமதி. வனிதா மோகன் அவர்கள் 15 லட்சம் ரூபாய்.

15. மாதா குழும கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் எஸ். பீட்டர் அவர்கள் 10 லட்சம் ரூபாய்.

16. தென்னிந்திய திரைப்பட வர்த்தக சங்கத்தின் கௌரவ செயலாளர் திரு.எல். சுரேஷ் அவர்கள் 10 லட்சம் ரூபாய்.

17. சிரைன் வேளாங்கண்ணி சீனியர் மேல்நிலைப் பள்ளியின் சார்பாக அதன் தலைவர் மற்றும் தாளாளர் திருமதி. பி.கே.ஆர். பிள்ளை அவர்கள் 10 லட்சம் ரூபாய்.

18. பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் தலைமை பொது மேலாளர் திரு. முகமது அஷ்ரப் கான் அவர்கள் 10 லட்சம் ரூபாய்.

19. கிருஷ்ணகிரி மாவட்டம், ஹரூர் – அம்மன் குழும நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. எம். ராமசாமி அவர்கள் 7 லட்சம் ரூபாய்.

20. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் திரு. தேவா மற்றும் உறுப்பினர் செயலர் செல்வி. குமாரி சச்சு ஆகியோர் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சார்பாக 7 லட்சத்து 10 ஆயிரத்து 936 ரூபாய்.

21. பாரதியார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் சி. சுவாமிநாதன் அவர்கள் பாரதியார் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளம் 7 லட்சத்து 1 ஆயிரத்து 648 ரூபாய்.

22. ஆசான் மெம்மோரியல் சங்கத்தின் பொதுச் செயலாளர் திருமதி. சாமளா ஜெயபிரகாஷ் அவர்கள் 6 லட்சம் ரூபாய்.

23. திரைப்பட நடிகை செல்வி நயன்தாரா 5 லட்சம் ரூபாய்.

24. சென்னை, சர்ச் பார்க் Sacred Heart மெட்ரிகுலேஷன் மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவிகள் செல்வி. கே. ஜெய்வர்ஷினி, செல்வி. எம். மனிஷா, செல்வி. ஜி. சுஜித்ரா ஆகியோர் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 30 ஆயிரம் ரூபாய்.

25. மக்கள் குரல் மற்றும் Trinity Mirror நாளிதழ்களின் ஆசிரியர் திரு.ஆர். முத்துகுமார் மற்றும் செயல் இயக்குநர் திரு.பி. ஜீவாநந்தம் ஆகியோர் 6 லட்சம் ரூபாய்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக 35 கோடியே 9 லட்சத்து 90 ஆயிரத்து 271 ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (9.2.2012) அளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 103 கோடியே 87 லட்சத்து 61 ஆயிரத்து 469 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 9.2.2012